செய்தி வெளியீடு எண்: 81 நாள்:30.01.2013

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா அரிசி கையிருப்பு, மத்திய தொகுப்பிலிருந்து இயக்க செயல்பாடுகள் ஆகியன குறித்த மாநில அளவிலான மண்டல மேலாளர்கள், இந்திய உணவு கழக அலுவலர்களுடனான கலந்தாய்வு கூட்டம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் இன்று 30.01.13 சென்னை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக உள்ள தமிழ்நாட்டில்தான் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. மத்திய தொகுப்பிலிருந்து மாதந்தோறும் AAY அரிசி கிலோ ரூ. 3க்கும், BPL அரிசி ரூ. 5.65க்கும், APL அரிசி கிலோ ரூ. 8.30க்கும் என 2.96 இலட்சம் மெ.டன் கொள்முதல் செய்து விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்திற்கு மாதம் ஒன்றுக்கு 3.18 லட்சம் மெ.டன் தேவைப்படுகிறது. மீதமுள்ள அரிசி உப ஒதுக்கீடாக இந்திய உணவுக் கழகத்திலிருந்து பெற்று விநியோகிக்கப்படுகிறது.

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் 4.27 இலட்சம் மெ.டன் அரிசியும், இந்திய உணவுக் கழக கிடங்குகளில் தமிழ்நாட்டின் தேவைக்கென 5.10 இலட்சம் மெ.டன் அரிசியும் கையிருப்பில் உள்ளது. மொத்தமுள்ள 9.37 இலட்சம் மெ.டன் அரிசி 3 மாத பொது விநியோகத் திட்ட ‘விலையில்லா அரிசி’ விநியோகத்திற்குப் போதுமானது என்று உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய உணவுக் கழக கிடங்குகளில் உள்ள அரிசி முழுவதும் இரண்டு வார கால அவகாசத்தில் மாநில அரசின் பொது விநியோகத் திட்ட கிடங்குகளுக்கு இயக்கம் செய்து முடிக்க செயல் திட்டங்கள் குறித்தும், துரித இயக்கம் செய்யும்போது ஏற்படும் தடைகளைக் களைதல் போன்ற அம்சங்கள் இந்திய உணவுக் கழக அலுவலர்கள், மண்டல மேலாளர்கள் ஆகியோருடன் விவாதிக்கப்பட்டது. மேலும், இந்திய உணவுக் கழகம், மாநில சேமிப்பு கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் சேமிப்பு கிடங்குகளில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள மத்திய தொகுப்பு அரிசியை குறிப்பிட்ட கால வரையறைக்குள் இயக்கம் செய்யத் தவறும் போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தொடர்ந்து முன்னேற்றம் காணப்படாத இனங்களில் சம்பந்தப்பட்ட போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களது நியமனம் இரத்து செய்யப்பட வேண்டுமெனவும், அவசியமெனக் கருதும் மாவட்டங்களில், மண்டல போக்குவரத்துத் துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் லாரிகள் ஏற்பாடு செய்து இயக்கத்தைத் துரிதப்படுத்த வேண்டுமெனவும்

மண்டல மேலாளர்களை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மேலும், மத்திய தொகுப்பு அரிசியை இருப்பு வைத்துள்ள தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் கிடங்கு அலுவலர்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதால், இயக்கத்தை விரைந்து முடிக்க இவர்களுக்கு தக்க ஆலோசனை வழங்கி இயக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக களப் பணியாளர்களுக்கு தினசரி இயக்க செயல்பாடுகளில் முன்னுரிமை அடிப்படையில் ஒத்துழைப்பு தரப் பணிக்குமாறு இந்திய உணவுக் கழக அலுவலர்களை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார். மேலும் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையின்படி பொங்கல் பரிசு தொகுப்பிற்கு, தரமான பச்சரிசியை உரிய காலத்தில் தருவித்து வழங்கிய இந்திய உணவு கழக அலுவலர்களை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் பாராட்டினார்.

மேலும் மத்திய தொகுப்பு அரிசியை இயக்கம் செய்வதற்கான செயல்பாடுகள் குறித்து, இந்திய உணவுக் கழகம்( FCI), மத்திய சேமிப்பு நிறுவனம் (CWC), தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் (TNWC) ஆகியவற்றின் உயர் அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் ஒன்று விரைவில் நடத்தப்படும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நடப்பு 2012–13 கரீப் நெல் கொள்முதல் பருவத்தில் பருவ மழை பொய்த்த போதும், காவிரியில் உரிய பங்கு தண்ணீர் கிடைக்காத போதும், தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விவசாயிகளின் துயர் துடைத்து மும்முனை மின்சாரம் வழங்கி ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நெல் சாகுபடி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உத்தரவிட்டார்கள். விவசாயிகள் மிகச் சிரமத்துடன் தாங்கள் விளைவிக்கும் நெல்லை வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் (Distress Sale) தவிர்க்கும் பொருட்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள், டெல்டா பாசனப் பகுதி அல்லாத மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையான அளவுக்குச் செயல்படும். மேலும் ஊக்கத் தொகையாக சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70/–ம், சாதா ரக நெல்லுக்கு ரூ.50/ம் வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்று ரூ. 1350/–க்கும், சாதா ரக நெல் ரூ.1300/–க்கும் கொள்முதல் செய்யப்படும். இதுவரை தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் 408 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 13,837 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 95 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு ஜனவரி மாதத்தில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் துவரம் பருப்பு 94 சதவீதமும், உளுத்தம்பருப்பு 90 சதவீதமும், செறிவூட்டப்பட்ட பாமாயில் 95 சதவீதமும் கிடங்குகளுக்கு இயக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள 33490 நியாய விலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. சர்க்கரை, கோதுமை உள்ளிட்ட அனைத்து பொருள்களும் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்க நியாய விலைக் கடைகளில் உள்தாள் ஒட்டும் பணி 83 சதவீதம் முடிவடைந்துள்ளது என்றும் 28.1.13 வரை 1.62 கோடி குடும்ப அட்டைகளுக்கு உள்தாள் ஒட்டப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி, கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டதனைத் தொடர்ந்து 16.5.2011 முதல் இன்று வரை சுமார் 3 கோடியே 99 இலட்சம் மதிப்பிலான கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் 1883 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு 14,417 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் தொடர்புடைய 8690 நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களில் 360 நபர்கள் தடுப்புக் காவல் தண்டனைச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

நியாய விலை அங்காடிகளில் எல்லா வேலை நாட்களிலும், அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கேற்ப விநியோகம் செய்ய வேண்டுமென்றும், அங்காடிக்கு வரும் பொதுமக்களிடம் கனிவுடன் பேசி, பொருள்களை வழங்கிட அங்காடி ஊழியர்களை அறிவுறுத்த வேண்டுமென மாண்புமிகு உணவு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் செயல் திட்டங்களின் பயன்கள் அனைத்தும், ஏழை எளிய மக்களைச் சென்றடைய அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் அயராது பாடுபட வேண்டுமென மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர், திரு. பி.எம், பஷீர் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. எம். சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. கே. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., இந்திய உணவுக் கழக பொது மேலாளர் திரு. கோலபிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**